**Dominic Perrottet**
Premier of New South Wales

**Paul Toole**
Deputy Premier
Minister for Regional NSW

**Stuart Ayres**
Minister for Jobs, Investment, Tourism and Western Sydney

**Brad Hazzard**
Minister for Health and Medical Research

# MEDIA RELEASE

வெள்ளிக்கிழமை, 15 அக்டோபர் 2021

## நியூ சவுத் வேல்ஸ் 80 சதவிகித இரட்டைத் தவணை இலக்கை நோக்கி விரைகிறது

எதிர்வரும் அக்டோபர் 18 திங்கட்கிழமைதான், முழுமையாகத் தடுப்பூசி போட்டுள்ளவர்களுக்கு நியூ சவுத் வேல்ஸை மீண்டும் திறப்பதற்கான செயல்திட்டத்தின் 80 சதவிகித அமைப்புகள் நடைமுறைக்கு வரும் நாள் என்று உறுதியாக, மாநிலத்தின் இரண்டாவது தவணை தடுப்பூசிகளின் விரைவான வேகம் உணர்த்துகிறது.

சமூக விளையாட்டு மீண்டும் தொடங்கும், அதிகமாக நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் மீண்டும் ஒன்றிணைவார்கள், அத்துடன் திருமணங்கள் மற்றும் இறுதிச் சடங்குகளில் விருந்தினர்களுக்கு இனி எந்தவொரு உச்சவரம்பும் இருக்காது. அலுவலகங்களில் முகக்கவசங்கள் இனி தேவைப்படாது, உபசரிப்புப் பணி நடைபெறும் வளாகங்களில் உள்ளிடங்களிலும், வெளியிடங்களிலும், நின்றுகொண்டே குடிப்பதற்கும், நடனமாடுவதற்கும் அனுமதியளிக்கப்படும்.

**நவம்பர் 1 -ஆம் தேதி முதல், உபசரிப்புப் பணி நடைபெறும் வளாகங்களுக்கான முன்பதிவுகளுக்கு இனி உச்சவரம்பு கிடையாது.**

**மேலும் நவம்பர் 1 -ஆம் தேதி முதல், சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகத்தினால் (TGA) அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு மருந்தைக் கொண்டு முழுமையாகத் தடுப்பூசி போட்டுள்ளதாக, காமன்வெல்த் அரசாங்கம் அங்கீகரித்துள்ள வெளிநாட்டிலிருந்து வந்திறங்கும் பயணிகளுக்கு, நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் தொற்றுத் தடைக்காப்பு (quarantine) மற்றும் உச்சவரம்புகள் (caps) போன்றவைகளை நீக்கி**, வெளிநாடுகளில் சிக்கியுள்ள ஆஸ்திரேலியர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் நாடு திரும்புவதற்கு உதவுகிறது. வந்திறங்கும் பயணிகளுக்கான பரிசோதனைத் தேவைகள் பற்றிய மேலதிக ஆலோசனைகள் இனிவரும் நாட்களில் வழங்கப்படும்.

முழுமையாகத் தடுப்பூசி போட்டு ஏற்கனவே தொற்றுத் தடைக்காப்பில் இருந்த பயணிகளும், தங்கள் தொற்றுத் தடைக்காப்புத் தேவைகளை, அது 14 நாட்களுக்குக் குறைவாக இருந்தாலும், நவம்பர் 1 -ஆம் தேதியன்று நிறைவு செய்வார்கள்.

முழுமையாகத் தடுப்பூசி போடாமல் வெளிநாட்டிலிருந்து வருகை தரும் பயணிகளின் உச்சவரம்பு வாரத்திற்கு 210 நபர்கள் என்ற வகையில் இருக்கும், மேலும் அவர்கள் 14 நாட்கள் விடுதியில் கட்டாயத் தொற்றுத் தடைக்காப்பை மேற்கொள்ள வேண்டும்.

**(ப்ளூ மவுண்டன்ஸ் (Blue Mountains), உல்லங்காங் (Wollongong), ஷெல்ஹார்பர் (Shellharbour) மற்றும் மத்திய கடற்கரை (Central Coast) உள்ளிட்ட) சிட்னி பெருநகர் (Greater Sydney) மற்றும் பிராந்திய நியூ சவுத் வேல்ஸ் (Regional NSW) ஆகியவற்றுக்கு இடையேயான பயணமும் நவம்பர் 1 -ஆம் தேதி முதல் அனுமதிக்கப்படும், இது பிராந்தியங்களில் உள்ள மக்கள் தங்களது இரண்டாவது தடுப்பூசியைப் பெறுவதற்கான கூடுதல் நேரத்தை அளிக்கிறது.**

**இந்த மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய பிராந்திய வணிகங்களை ஆதரிப்பதற்காக, நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் அக்டோபர் 31 -ஆம் தேதி வரை 'ஜாப்சேவர்' (JobSaver) திட்டத்தின் இரண்டாவது குறைப்பினை (second taper) ஒத்திவைக்கும். நவம்பர் 1 -ஆம் தேதி முதல் திட்டமிடப்பட்ட 15 சதவிகிதத்துக்கான குறைப்புப் பண வழங்கலுக்கு (tapering payments) முன், தகுதியுள்ள பிராந்திய வணிகங்கள் வாராந்திர ஊதிய வழங்கலில் (weekly payroll) 30 சதவீதத்தைப் பெறும்.**

கட்டுப்பாடுகள் தளர்த்துதல் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் திரும்புதல் ஆகியவை குடும்பங்களை மீண்டும் ஒன்று சேர்க்க உதவும் என்றும், பொருளாதாரத்திற்குக் குறிப்பிடத்தக்க ஊக்கத்தை அளிக்கும் என்றும் முதல்வர் டொமினிக் பெரோட்டெட் (Dominic Perrottet) கூறினார்.

"இந்த தடுப்பூசி மைல்கல்லை எவரும் நினைத்ததை விட நாம் விரைவாக எட்டியுள்ளோம், மேலும் இது மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் தடுப்பூசியைப் போட்டுக் கொண்ட அவர்களது கடின உழைப்புக்கு ஒரு சான்று" என்று திரு பெரோட் கூறினார்.

"முழுமையாகத் தடுப்பூசி போட்டுள்ள பயணிகளை மீண்டும் வரவேற்பது என்பது கிறிஸ்துமஸ் சமயத்தில் குடும்பங்களும், நண்பர்களும் தங்களது வீட்டில் இருக்க முடியும் என்பது மட்டுமல்ல, அது நமது பொருளாதாரத்திற்குப் பெரும் ஊக்கத்தையும் அளிக்கும்."

பிராந்திய நியூ சவுத் வேல்ஸ் மற்றும் சிட்னி பெருநகர் இடையேயான பயணத்தைத் தாமதப்படுத்த உறுதியான முடிவு எடுக்கப்பட்டு, பிராந்திய வணிகங்களுக்கான 'ஜாப்சேவர்' (JobSaver) திட்டத்தை நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் விரிவுபடுத்தியது என்று துணை முதல்வர் பால் டூல் (Paul Toole) கூறினார். நவம்பர் 1 -ஆம் தேதிவாக்கில், பிராந்திய உள்ளூர் அரசுப் பகுதிகளில் (LGAs) 77 சதவிகிதத்திற்கும் மேலாக முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"தடுப்பூசியைப் போட்டுக் கொள்வதற்கான ஒரு அற்புதமான வேலையை அனைவரும் செய்துள்ளனர், அத்துடன் விகிதாச்சாரங்கள் வேகமாக உயர்கின்றன; இருப்பினும், நாங்கள் சுகாதார மாதிரியைப் (health modelling) பின்பற்றி, பிராந்திய சமூகங்களின் கருத்துக்களையும் கேட்டோம், அவர்கள் விருந்தினர்களைத் திரும்ப அழைக்குமுன், தங்கள் இரட்டைத் தவணை தடுப்பூசி விகிதங்களை முடிந்தவரை உயர்த்துவதற்கு நேரம் கூடுதலாக வேண்டுமென விரும்பினர், "என்று திரு டூல் கூறினார்

"பிராந்திய நியூ சவுத் வேல்ஸில் உள்ள வணிகங்கள், மக்களை மீண்டும் வரவேற்கத் தயாராகி வருவதை நாங்கள் அறிவோம், ஆனால் தடுப்பூசிகள் தங்கள் வேலையைச் செய்யும் என்று நாம் அதிக நம்பிக்கையுடன் இருக்க இந்த உரிமையைப் பெறுவது முக்கியம் - மேலும் நாங்கள் பிராந்தியங்களுக்கான பயணத்தை மீண்டும் திறக்கும்போது, அவர்கள் திறந்தே இருக்கலாம், இதற்கிடையில் வணிகங்களும் தொடர்ந்த ஆதரவைப் பெறும். மக்களின் பொறுமைக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்."

வேலைகள், முதலீடு, சுற்றுலா மற்றும் மேற்கு சிட்னி அமைச்சர் ஸ்டுவர்ட் அயர்ஸ் (Stuart Ayres) 80 சதவிகிதம் மீண்டும் திறக்கப்படுவதை வரவேற்று, மீட்புக்கான பாதையில் ஒரு முக்கியமான கட்டம் என்று இதை அங்கீகரித்தார்.

"நாங்கள் உள்ளூர்ப் பகுதிகளைத் திறந்துவிடுகிறோம், உலகிற்கும் திறந்துவிடுகிறோம். நீங்கள் வெளிநாடுகளில் இருந்து வீடு திரும்பினாலுமோ அல்லது உங்களுக்கு பிடித்த உள்ளூர் இடங்களை அனுபவித்தாலுமோ, மக்கள் பாதுகாப்பான வழியில் ஒன்றிணைவதற்கான நேரம் இப்போதுதான்," என்று திரு அயர்ஸ் கூறினார்.

உள்ளரங்குகளில், 4 சதுர மீட்டருக்கு ஒரு நபர் வீதமும், வெளியரங்குகளில், 2 சதுர மீட்டருக்கு ஒரு நபர் வீதமும் அனைத்து வளாகங்களும் தொடர்ந்து செயல்படும்.

80 சதவிகித இரட்டைத் தவணை தடுப்பூசி இலக்கை அடைய, நியூ சவுத் வேல்ஸ் சமூகம் அசாதாரண வேலையைச் செய்துள்ளது, அத்துடன் பெருந்தொற்றிலிருந்து ஆஸ்திரேலியாவை வெளிக்கொணர்ந்திருக்கிறது என்று சுகாதார அமைச்சர் பிராட் ஹஸார்ட் (Brad Hazzard) கூறினார்.

"நியூ சவுத் வேல்ஸ் மக்கள் இந்த அருமையான முடிவை அடைய ஒன்றிணைந்துள்ளனர், அத்துடன், பெருந்தொற்றுநோய்க்கு முன்பு நாம் அறிந்த வாழ்க்கைக்கு நெருக்கமாக நம்மைக் கொண்டுவந்திருக்கின்றனர். ஆனால் இன்னும் நாம் அந்த நிலைக்குச் செல்லவில்லை," என்று திரு ஹஸார்ட் கூறினார்.

"கோவிட் தொற்றுநோய் நியூ சவுத் வேல்ஸில் இன்னும் நம்மிடையே சுற்றிக்கொண்டிருப்பதை நம்மால் மறக்க முடியாது, மேலும் இரட்டைத் தவணை விகிதாச்சாரங்களை இன்னும் அதிகமாக உயர்த்துவதற்குத் தொடர்ந்து தடுப்பூசி போட வேண்டும். அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க நாங்கள் இரட்டைத் தடுப்பூசியில் முடிந்தவரை 100 சதவிகிதத்தை எட்டுவதற்கு விரும்புகிறோம்."

நியூ சவுத் வேல்ஸில் குடியிருப்பவர்கள் இப்போதும் கோவிட்-பாதுகாப்பு உள்-நுழைவுகளுக்கு (COVID-Safe check-ins) உட்பட வேண்டும், அத்துடன் பெரும்பாலான அமைப்புகளில் ஊழியர்களுக்குத் தடுப்பூசிக்கான சான்றை வழங்க வேண்டும்.

நியூ சவுத் வேல்ஸை மீண்டும் திறப்பதற்கான செயல்திட்டத்தில் முன்னர் அறிவித்தபடி, டிசம்பர் 1 -ஆம் தேதியன்று மேலும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்.

உங்கள் தடுப்பூசிக்கான சான்றிதழின் நகலைப் பதிவிறக்கம் செய்வது எப்படி என்பதை அறிய Services Australiawebsite என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

இதுவரை நீங்கள் கோவிட் -19 தடுப்பூசிக்கு முன்பதிவு செய்யவில்லை என்றால், விரைவில் தயவுசெய்து ஒரு சந்திப்பு ஏற்பாட்டுக்கு முன்பதிவு செய்யவும்.

சமீபத்திய தகவல்களுக்கும், 80 சதவிகித செயல்திட்டம் மற்றும் கட்டுப்பாடுகள் நீக்கம் போன்றவற்றைப் பார்வையிடவும் nsw.gov.au என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

**MEDIA: Ian Paterson | Premier | 0438 748 501**
**Alexandra Bernhardt | Deputy Premier | 0448 203 742**
**Sophie Hull | Minister Ayres | 0447 583 756**
**Natasha Wallace | Minister Hazzard | 0439 484 015**